# DEPOSITION OF WITNESS

## (Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM

| | |
|---|---|
| CC No. | : 301/2019 |
| Name | : Manimuthu |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**29.01.2026**

**1, 3 மற்றும் 4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**2ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது குடிமங்கலம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 15.10.2015 அன்று கொமரலிங்கம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது உடுமலை அரச மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த பாண்டுரங்கன் மனைவி சுசீலா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப கொமரலிங்கம் காவல் நிலைய குற்ற எண். 424/2015 இதச பிரிவு 294(பி), 323, 324, 506(ii) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் மற்றும் புகாரை இணைத்து நீதிமன்றத்திற்கும் அதன் ஒரு நகலை மேல் விசாரணைக்கு காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (1 மற்றும் 2 எதிரிகள் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறார்கள்)**

(1) சம்பவம் பற்றி 15.10.2015ம் தேதி தகவல் கிடைத்தது. இண்டிமேசன் 17.00 மணிக்கு கிடைத்தது. எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் 18.00 மணிக்கு பதிவு செய்தேன். அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்த போது அ.சா.1 உடன் யார், யார் இருந்தார்கள் என்றால் அவரது உறவினர்கள் இருந்தார் யார் என்று தெரியாது. அ.சா.1க்கும், எதிரிக்கும் 15 ஆண்டுகளாக பூமி சம்மந்தமாக பிரச்சனை இருந்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அது சம்மந்தமான ஆவணத்தை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரைப் பெற்று சரிவர விசாரித்தாமல் எதிரி மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.29 17:08:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்